TAMIL MURASU, WEDNESDAY, 25 JULY 2018, PAGE 2

# டாக்டர் டோனி டானுக்கு கௌரவ முனைவர் பட்டம்



முன்னாள் அதிபர் டோனி டானுக்கு (இடது) கௌரவ முனைவர் பட்டம் அளிக்கிறார் அதிபர் ஹலிமா யாக்கோப். **படம்: நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்**

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் முன்னாள் அதிபர் டோனி டான் கெங் யாமுக்கு நேற்று ஆக உயரிய கௌரவ பட்டத்தை அளித்து சிறப்பித்தது.

1985ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை கல்வி அமைச்சராகப் பணியாற்றிய டாக்டர் டான், பல்கலைக் கழகத்திற்கும் சிங்கப்பூரின் உயர்கல்வி துறைக்கும் பெரும் பங்காற்றியதற்காக கௌரவ முனைவர் பட்டம் பெற்றார்.

இவர் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் ஆகிய இரு கழகங்களுக்கும் பொறுப்பு அமைச்சராக இருந்து அவற்றை நிறுவுவதில் முக்கியப் பங்காற்றினார். டாக்டர் டோனி டானின் வழிகாட்டுதலில் சிங்கப்பூரின் பல்கலைக் கழக கல்வி உலகமயமானதோடு குடும்ப, நிதி பின்னணியையும் பொருட்படுத்தாமல் கூடுதலான சிங்கப்பூரர்களைச் சென்று அடைந்தது என்று தெரிவிக்கப் பட்டது.

விழாவில் பேசிய டாக்டர் டான், தத்தம் துறைகளில் மட்டுமல்லாது பிற துறைகளிலும் தொடர்ந்து கற்கவேண்டும் என பட்டதாரிகளை ஊக்குவித்தார்.